# பத்துப்பாட்டில் உலகாயதச் சிந்தனை

**ஆ.முத்துலட்சுமி**
உதவிப் பேராசிரியர்
தமிழ்த்துறை
அருள் ஆனந்தர் கல்லூரி
கருமாத்தூர்

**மலர்:** 3
**இதழ்:** 3
**தொகுதி:** II
**மாதம்:** ஜனவரி
**வருடம்:** 2019
**ISSN:** 2454-3993

## முன்னுரை

சங்க காலத்தைப் பற்றிக் கூறும் இலக்கியங்களில் பத்துப்பாட்டு பாடல்கள் இயற்கை சார்ந்த சூழலை விரிவாகப் பதிவு செய்திருக்கின்றன. வாழ்வியலில் பெரும் இன்னல்களைச் சந்திக்கும் மக்கள் அதற்கான பொருள் தேடலில் ஈடுபடுவதையும், வழிகள்தோறும் இருக்கும் நிலங்களில் கிடைக்கும் பொருள்கள், உணவுகள் பற்றிக் கூறப்படுவதிலும் பொருளாயதச் சிந்தனையே வெளிப்படுகின்றன. புலவர்களால் இயற்றப்பட்டாலும் ஆற்றுப்படைப் பாடல்கள் பாணர், பொருநர், கூத்தர் போன்ற கலைஞர்களை ஆற்றுப்படுத்துவனவாக அமைகின்றன. பொருளாயத வாழ்வின் நெருக்கடிக்கு உள்ளாகும் தனிமனிதர்களை அவர்கள் வாழ்வின் பொருளின்மையிலிருந்து விடுபடுவதற்கான வழிமுறையே ஆற்றுப்படுத்துதல் ஆகும். பொருள் வேண்டியே பாணர்கள் ஆற்றுவிக்கப்பட்டனர் என்பதால்தான் ஆற்றுப்படை நூல்கள் எனப்பட்டன. “ஆற்றுப்படை என்பது சங்ககாலப் புலவர்கள் செய்த நூல் வகைகளில் ஒன்று. பரிசு பெற்றுவந்த ஒருவன், பரிசு பெற நாடிச்செல்லும் மற்றொருவனுக்கு வழிசொல்லி அனுப்புவது”[1] என்று சாமி சிதம்பரனார் ஆற்றுப்படை என்பதற்கு விளக்கமளிக்கின்றார். பொருள்சார்ந்த ஒன்றாகவே புலவர்கள், பாணர்களின் வாழ்க்கை அமைந்திருந்தது. பொருள் தேடிச்செல்லும் வகையில் அவர்கள் அரசர்களை அண்டியிருந்தனர் என்பது இதில் தெளிவாகின்றது. எனவேதான் பாணர்களின் பொருளாயத வாழ்வாக ஆற்றுப்படை நூல்கள் காணப்படுகின்றன. புலவர்களும் அரசர்களின் புகழைப் போற்றிப் புகழ்ந்தே தம் தேவைகளை நிறைவுசெய்து கொண்டனர். பத்துப்பாட்டு நூல்களிலும் உலகாயதச் சிந்தனைகள் காணப்படுகின்றன. தெய்வங்களைப் பற்றிய பல்வேறு சித்திரிப்புகள் காணப்பட்டாலும் பொருளாயத வாழ்வே முதன்மையிடம் பிடித்தது என்பதை அறியமுடிகின்றது. உலகாயத நோக்கில் உலகையும் மனிதர்களையும் சிந்தித்தமையைக் காணமுடிகின்றது.

மதுரைக்காஞ்சியில் பாண்டிய நெடுஞ்செழியனுக்கு நிலையாமையை வலியுறுத்தும்வகையில் மாங்குடி மருதனாரால் பாடப்பட்டது. இதில்,

> **“உயர்நிலை உலகம் அமிழ்தொடு பெறினும்,**
> **பொய் சேய் நீங்கிய வாய் நட்பினையே” (மது.கா.197-198)**

என்ற பாடலடிகள் தேவர் உலகத்தையே தருவதாயினும் பொய் கூறுதல் கூடாது என்று கூறுகின்றன. பொய் கூறுவதற்காகத் தேவர் உலகத்தைத் தருவதாகக் கூறுவது வைதிக நெறியை இடித்துரைத்தலாக இங்குக் காணப்படுகின்றது. வானம் என்னும் விசும்பே உலக பொருட்களின் தோற்றத்திற்கும் அதன் மாற்றத்திற்கும் காரணமாக அமைகின்றது. “தன் நிலவுதலுக்கு இடத்தை எடுத்துக் கொள்ளாத எந்தப் பொருளும்

பிரபஞ்சத்தில் இல்லை”[2] என்று வானம் பொருளின் இருப்பிற்கும் அதன் மாற்றத்திற்கும் காரணமெனக் குறிக்கின்றார் இராசேந்திரசோழன். இதனை, ‘அகல் இரு வானத்து இமிழ்ந்தது’ (மது.கா.266) என்று மதுரைக் காஞ்சியிலும், ‘அகல் இரு விசும்பில் பாய் இருள் பருகி’ (பெரும்பாண்.1-2) என்று பெரும்பாணாற்றுப்படையிலும் பொருட்களின் விரிவடைவுக்கு அதாவது மாற்றத்திற்கு வானமே காரணம் என்ற அறிவியல் உண்மை கூறப்படுகின்றது. திருமுருகாற்றுப்படையில் மலையின் இயற்கையை வருணிக்கும் புலவர் தேனிறாலுக்கு உவமையாக ஞாயிற்று மண்டலத்தைக் குறிக்கின்றார். ஞாயிறு மண்டலம் என்பது பூமியும் இணைந்துள்ள சூரியக் குடும்பமாகும் ‘விண்பொரு நெடுவரைப் பரிதியின் தொடுத்த’ (திரு.299) என்ற பாடலடியில் விண்ணை முட்டும் மலையின் சிறப்பும் சூரியக் குடும்பம்போல தேனிறால் இருப்பதும் சுட்டப்படுகின்றது. மலையில் கிடைக்கும் உணவுவகைகள், பழங்கள் முதலியவற்றைப் புலவர் வருணிக்கும் முறையில் இறையருளைவிட உணவுக்கானத் தேடலே முன்னிற்பது விளங்குகின்றது. ‘வாழை முழுமுதல் துமிய’ (திரு.307), ‘பழம்முதிர்ச் சோலை மலை கிழவோனே’ (திரு.317) என்று மலையை உடைமையாகக் கொண்டவன் எனக் குறிக்கப்படுவதையும் காணமுடிகின்றது. கிழமை பூணுதல் என்பது பொருளாயத வாழ்விற்கான செயல்பாடாகும். முருகன் மலையை உடைமை பூண்டுள்ளான் எனக் குறிப்பது பொருளாயதச் செயலை முன்னிறுத்துகின்றது.

பொருநராற்றுப்படையில் தவத்தின் பலனை மேலுலகத்தில் அல்லாது உடம்போடு வாழும் காலத்திலேயே பெறுவார் என்று குறிக்கப்படுகின்றது.

**“தவம்செய் மாக்கள் தம்உடம்பு இடாஅது**
**அதன்பயன் எய்திய அளவை மான” (பொருநர்.91-92)**

என்ற பாடலடிகள் சுட்டுகின்றன. தவத்தின் பயனை இம்மை உடம்போடே பெறுதல் என்பதாகக் குறிக்கின்றது. இது உலகாயத சிந்தனையாகும். மறுமையை மறுதலிக்கும் பண்பு இப்பாடலடிகளில் காணப்படுகின்றது.

**“கடவுள் மால்வரை கண்விடுத் தன்ன” (சிறுபாண்.205)**

என்ற பாடலடி கடவுள் உறையும் மேருமலை எனக் குறிப்பிடப்படுகின்றது. இதில் கடவுள் கண்விழித்துப் பார்த்ததுபோல எனக் குறிக்கப்படாமல் மலை கண்விழித்துப் பார்த்ததுபோல எனக் கடவுளுக்குப் பதிலாக மலை குறிக்கப்படுகின்றது. இயற்கைப் பொருளுக்கு முதன்மைதந்து கடவுளை அடுத்த நிலையில் வைக்கும் பாங்கினை இதில் உணர முடிகின்றது.

**“வாள்நிற விசும்பின் கோள்மீன் சூழ்ந்த**
**இளங்கதிர் ஞாயிறு எள்ளும் தோற்றத்து” (சிறுபாண்.242-243)**

என்ற பாடலடிகள் உணவு தரும் பாத்திரமானது வானில் கோள்களால் சூழப்பட்ட சூரியனின் நிறத்தைக் கீழானதாக்க வேண்டும் என்று கூறப்படுகின்றது. கோள் சூழ்ந்த சூரியன் எனக் குறிப்பது அக்காலத்து மக்களது வானியல் அறிவை வெளிப்படுத்துவதாக அமைகின்றது.

நீரானது இறைவனால் பொழியப்படுவது என்று கூறுவது வழக்கம். அல்லது மழைக்காக யாக, வேள்விகள் நிகழ்த்துவது வேத, சாஸ்திரம் கற்றவர்களின் பணியாகும். ஆனால் முல்லைப்பாட்டுப் பாடலடிகள் மழை பொழிவது கடல்நீர் ஆவியாகி அது குளிர்ந்து மழையாகப் பெய்யும் என்ற அறிவியல் உண்மையைக் கூறுகின்றது.

**“நனந்தலை உலகம் வளைஇ நேமியொடு**
**வலம்புரி பொறித்த மாதாங்கு தடக்கை**
**நீர்செல நிமிர்ந்த மாஅல் போல**
**பாடு இமிழ் பனிக்கடல் பருகி வலன்ஏர்பு**
**கோடு கொண்டு எழுந்த கொடுஞ்செலவு எழிலி” (முல்லை.1-5)**

இப்பாடலடிகளில் மழை திருமாலுக்கு உவமையாகக் கூறப்படுகின்றது. மழைபொழியும் தோற்றமானது. மாவலி தந்த நீரால் நெடுமையாக வானளவு உயர்ந்த திருமாலைப் போல வானிற்கும் பூமிக்கும் மழையின் தோற்றம் காணப்படுகின்றது எனக் குறிக்கின்றது. இப்பாடலிலும் தெய்வத்தை இரண்டாமிடத்தில் வைக்கும் போக்கினை அறியமுடிகின்றது. உலகியற் பொருட்களுக்கு முதன்மை அளித்தலின் இது பொருளாயதச் சிந்தனை என்று கொள்ளப்படுகின்றது.

பொழுது கணக்கிடும் கணக்கர்கள் இருந்தனர். 'பொழுது அளந்து அறியும் பொய்யா மக்கள்' (முல்லை.55) என்ற பாடல் அடி பொழுதை அளந்து கூறுபவர்கள் பொய்யுரைக்க மாட்டார்கள் என்று கூறப்படுகின்றது. பொழுதைக் கணக்கிடுவதற்கான சாதனங்கள் அக்காலத்தில் இருந்தனவென்பதும் அதைக் கொண்டு உரிய நேரத்தை அறிவித்தார்கள் என்பதும் அதில் பொய் கூற வாய்ப்பில்லை என்பதும் விளங்குகின்றது. நேரத்தை அளவிடும் கருவியைக் கொண்டிருந்த மக்கள் அறிவியல் நோக்கை பெற்றவர்கள் ஆவர்.

வானவர் என்று குறிப்பிடும் போது தேவ கணங்கள் என்று பெரும்பாலும் கூறப்படுவதுண்டு. ஆனால் வானவர் மக்களை வருத்தும்வகையினர் என்பதால் மேலுலக தெய்வங்கள் பற்றிய அச்சம் வெளிப்படுகின்றது. நன்மை செய்பவர் என்பதற்குப் பதிலாக பொருள்களைக் கவர்ந்துகொண்டு வருத்துபவர்கள் என்று கூறுவதால் வானவர் என்ற சொல் தெய்வத்திற்கு எதிரானதாகக் குறிக்கப்படுகின்றது.

**"நீல்நிற விசும்பில் அமர்ந்தனர் ஆடும்**
**வானவர் மகளிர் மான கண்டோர்**
**நெஞ்சு நடுக்குமாறூஉக் கொண்டி மகளிர்" (மது.கா.581-583)**

என்ற பாடலடிகள் இதனை வெளிப்படுத்துகின்றன. வானவர் மகளிர் என்ற தொடர் மேலுலக தேவதைகளைக் குறிப்பதாகும். ஆனால் அவர்கள் பரத்தையருக்கு உவமையாகக் கூறப்பட்டு மதிப்பிறக்கம் செய்யப்படுகின்றனர்.

**"முந்நீர் நாப்பண் ஞாயிறு போலவும்**
**பல்மீன் நடுவண் திங்கள் போலவும்" (மது.கா.668-669)**

என்னும் பாடலடிகள் ஞாயிறு, திங்கள் ஆகியனவற்றின் தோற்றத்தையும் இருப்பையும் குறித்துக் கூறுகின்றன. உலகை உற்றுக்கவனிக்கும் திறனுடையவர்கள்தான் இவ்வாறு இயற்கையைப் பற்றிய உவமைகளைக் கூறுபவர்களாக இருப்பர். வானில் உள்ள ஞாயிறு பற்றியும், அதன் நகர்வு பற்றியும் நிலாவைப் பற்றியும் அறிவுடையவர்கள் என்பது இதில் விளங்குகின்றது. இதுபோலவே,

**"நீல நிற விசும்பின் வலன் ஏர்பு திரிதரும்**
**நாள்மீன் விராஅய கோள்மீன் போல" (பட்டினம்.67-68)**

என்ற பாடலடிகளிலும் நாள் விண்மீன்கள் கடந்து செல்லுவதையும் அவற்றைச் சுற்றி கூட்டமாக நிற்கும் பிற கோள்மீன்களின் கூட்டங்களையும் குறித்த அறிவும் வெளிப்படுகின்றது.

அரசனை இறைவன் என்று குறிப்பிடுவதால் இறைவனின் பண்பு மனிதர்க்கு ஏற்றப்படுகின்றது. எனில் இறைவனைப்போல் மன்னன் என்று குறிப்பிடாமல் இறைவன் என்றே குறிப்பிடுவதைக் காணலாம். 'நல் இறைவன் பொருள் காக்கும்' (பட்டினம்.120) என்ற பாடலடி இவ்வாறு அமைகின்றது. இறைவனே அனைத்திற்கும் முதல் என்பது இங்கு கேள்விக்குட்படுத்தப்படுகின்றது. அரசனே மக்களுக்கு இறைவன் என்ற கருத்து பெறப்படுகின்றது. இதுவும் ஒருவகையில் உலகாயத மரபின் வெளிப்பாடாகக் கொள்ளத்தக்கதாகும். அதுபோல நடுகல்லைக் கடவுள் என்று விளிக்கும் பாங்கையும் காணமுடிகின்றது. நடுகல்லில் இன்னாரோடு பொருதுபட்ட இன்னான் என்று எழுதியிருக்கும் என்றும் அவ்வாறு எழுதப்பட்ட நடுகல் கடவுள்தன்மை வாய்ந்தது என்றும் கூறப்படுகின்றது. போரில் இறந்துபட்ட வீரர்களுக்கு நடுகல் இடும் வழக்கம் காணப்படுவதையும் அவற்றையே கடவுள் எனக் குறிப்பதையும் காணமுடிகின்றது. இதில் வைதிக நெறிப்பட்ட கடவுள் கருத்துக் காணப்படவில்லை. ஆனால் அந்நடுகல்லிற்குக் கடவுள்தன்மை இருக்கும் என்று கூறப்படுகின்றது. எனினும் கொடுமையான காட்டில் அச்சமின்றி பயணிக்க முடியாது என்றே பாடலில் குறிக்கப்படுகின்றது.

**"கடவுள் ஓங்கிய காடு ஏசு கவலை**
**ஒட்டாது அகன்ற ஒன்னாத் தெவ்வர்**
**கட்டினும் பனிக்கும் கரம் தவப் பலவே" (மலைபடு.396-398)**

என்று கூறப்படுகின்றது. மக்களின் வாழ்வில் கடவுள் கருத்து மனிதர்களுக்கு இணையானதாகக் கருதப்பட்டதேயன்றி இயற்கைக்கு மாறான சக்திகளை உடையதாகக் கூறப்படவில்லை. எனவே கடவுள் கருத்து சங்க காலத்தில் காணப்பட்டாலும் இயற்கைப் பொருள்களோடு இணை வைத்துக் கூறியும் மனிதர்களோடு இணைவைத்துக் கூறியும் அவற்றை உலகியல் சார்ந்ததாக மாற்றினர். எனவே மக்களின் வாழ்வியல் சிந்தனை முழுவதும் பொருளாயதம் சார்ந்ததாகவே இருந்தது எனக் கருத இடமுண்டு.

**முடிவுரை**

பத்துப்பாட்டிலும் தமிழர்களிடம் ஓங்கியிருந்த உலகாயதச் சிந்தனையானது தெய்வங்களை மறுதலித்தலாகவும், வானவ மகளிரை மதிப்பிறக்கம் செய்வதாகவும் காணப்பட்டது. உலகாயதச் சிந்தனையின் மரபே இவ்வாறு சித்திரிப்பதற்குக் காரணமாகும். இறைவனை அரசனாகக் கூறுவதும் நடுகல்லைக் கடவுள் என்று கூறுவதும் கடவுள் பற்றிய கருத்தாக்கங்கள் வைதிக நெறிப்பட்டவகையில் தமிழர்களைப் பெரிதும் பாதிக்கவில்லை என்பதையே சுட்டுகின்றன.

தமிழர்களிடம் ஐம்பூதங்கள் பற்றிய சிந்தனை உலகாயதச் சிந்தனையாக வெளிப்பட்டது. அது அவர்களது பொருளாயத வாழ்வையே முன்னிறுத்தி அமைந்தது என்பதை அறிந்துகொள்ள முடிகின்றது.